1969-க்கு முன்னால் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் இருக்கின்ற சங்கடங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும், பெரும்பாலானவர்கள் ஆக்கிரமிப்பு செய்வது விவசாயம் செய்வதற்காக இல்லை. காட்டுக்குள் ஆக்கிரமிப்பு செய்து விலையுயர்ந்த மரங்களை வெட்டி எடுக்கின்றார்கள். இதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புயல் காலங்களுக்கான காப்பு விடுதிகள்

*வினா எண். 753—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கடும் புயல் தாக்கும்போது புகலிடம் தரும் காப்பு விடுதிகள் அமைத்திட அரசு ஆலோசித்து வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) & (ஆ) அவை முன், விவர அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த புயல் பாதுகாப்பு விடுதிகள் அமைப்பதற்கு அரசுக்கு எந்தெந்த நிறுவனங்கள் உதவி செய்திருக்கிறது என்கின்ற விவரங்களையும், அந்த நிறுவனங்களின் பெயர்களையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மராட்டிய மாநில மக்கள் புயல் நிவாரணக் குழு 10 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அதேபோல் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளை இங்கு கட்டப்படுகிற புயல் பாதுகாப்பு இல்லத்திற்காக 28·12 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அதே போல் கானடா நாட்டு—அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம் (கன்னடியன் இன்டர் நேஷனல் டெவலப்மென்ட் ஏஜென்ஸி) 29 ஆயிரம் டாலர் தந்திருக்கிறார்கள். அதேபோல் ஐரோப்பிய பொருளாதார சமுதாய நிறுவனம் இங்கு 50 புகலிடம் கட்டுவதற்கு அவர்கள் பணம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிக் கொடுக்கப்பட்ட பணத்திலிருந்து இதுவரை இரண்டு இடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 17 இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் 11 இடங்களில் கட்டுவதற்கு அனுமதி

---

* 894-896ம் பக்கத்தில் இணைப்பு IIஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 ஏப்ரல் 20]

வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் ஐரோப்பிய பொருளாதார நிறுவனம் மூலமாக 50 கட்டிடங்கள் கட்டுவதாக இருக்கிறது மராட்டிய மாநிலத்திலிருந்து அந்த நிவாரண நிறுவனம் தந்த உதவியிலிருந்து கட்டிடம் கட்டப்பட இருக்கிறது. ஆக 85 கட்டிடங்கள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் நாகப்பட்டினத்தில் ஒரு விடுதி கட்டியதாகவும் அது திறக்கப்பட்டிருப்பதாயும் சொல்லப்பட்டுருக்கிறது. அது திறக்கிறபோது, சாதாரணமாக மந்திரிகள் யாராவது வந்துதான் திறப்பார்கள். இதற்கு மந்திரிகள் கிடைக்கவில்லையோ என்னவோ தெரியவில்லை; இந்த திறப்பு விழாவிற்கு ஸ்தல எம். எல். ஏ யையோ அல்லது எம்.பி.யையோ அஸோஸியேட் பண்ணவில்லை. எம்.எல் ஏ. என்றிருப்பது நான்? வேறு கட்சியைச் சேர்ந்தவன்; எம்.பி யாக இருந்தவர் முருகையன், அவரும் வேறுகட்சியைச் சேர்ந்தவர். சுத்தமாக அபிஷியல்களை வைத்தே திறந்திருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்களை அஸோஸியேட் செய்யவில்லை. அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு ஏன் இப்படி நடந்திருக்கிறார்கள், கட்சிக் கண்ணோட்டத்துடன்தான் இப்படி நடந்திருக்கிறார்களா என்பதை விசாரித்து முடிவு சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் கூப்பிடவில்லை என்றால், கட்சி நோக்கம் இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வெளிப்படையாகத் தெரிகிறது. புயல் புகலிடம் கட்டுவதில் காலதாமதம் ஆகக் கூடாது என்பதற்காக விரைவாகக் கட்டப்படுகிறது. இதைச் சொல்வதற்கு அவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும். புயல் எப்போது ஆரம்பித்தது? நாடு விடுதலை அடைந்தது 1947-ல்; ஆனால், 1977, 1978 ஆம் ஆண்டு வரையில் புகலிடம் கட்டப்படவில்லை. இன்றைக்கு 85 புயல் புகலிடங்கள் வேகமாமாகக் கட்டுவதற்கு செயல்படுகின்றபோது கால்கோள் விழா என்றால் காலதாமதம் ஆகும் என்பதற்காகஅப்படியில்லாமல் கட்டப்படுகிறது. இரண்டாவது, இதைத் திறப்பதற்கு திறப்பு விழா என்றாலும் காலதாமதம் ஆகும். அதற்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டாம். கட்டி முடிந்தால், திறக்கச் சொல்லியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுக் காடுகளில் ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கான கட்டணம்

*வினா எண் 754—திரு. என். லட்சுமிநாராயணன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசுக்குச் சொந்தமான காடுகளில் ஆடு மாடுகள் மேய்ச்சலுக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது ?